# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.563/2024

Deposition of Witness for L.W.2 / P.W.6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | | | |
| Father's Name | : | நாச்சிமுத்து | Occupation | : | Hotel |
| Village | : | கருங்கல்பாளையம் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**(எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)** Crl.M.P.No: எதிரி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு கருங்கல்பாளையத்தில் குடியிருந்து, கருங்கல்பாளையம் ஹவுசிங் போர்டுக்கு எதிர்ப்புறத்தில் ஹோட்டல் கடை வைத்துள்ளேன். கடந்த 22.09.2021 ஆம் தேதி அன்று, மதியம் சுமார் 2:30 மணியளவில், நான் எனது கடையில் இருந்த போது எனது கடைக்கு எதிர்ப்புறத்தில் சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபொழுது, ஒரு அம்மா கீழே விழுந்து கிடந்தார். அவரின் தலையின் மீது லாரியின் சக்கரம் ஏறி இருந்தது. அருகில் சென்று பார்த்த பொழுது, காதில் ரத்தம் வந்திருந்தது. பைக்கை ஓட்டி வந்தவருக்கும் லேசாக அடிபட்டு இருந்தது. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 22.09.2021 ஆம் தேதி அன்று, மதியம் சுமார் 2:30 மணியளவில், நான் கடையில் இருந்ததாகவும், அப்போது இரு சக்கர வாகனத்தில் விபத்தில் இறந்து போன

சித்ரா என்பவரை பின்னால் அமர வைத்துக்கொண்டு வீரப்பன் என்பவர் பைக்கை காவேரி ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையின் இடது புறமாக வீரப்பன்ஓட்டி வந்து கொண்டிருந்ததாகவும், எனது கடைக்கு அருகில் உள்ள அழகர் டாக்ஸி கடை முன்பாக வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது அவர்களுக்கு பின்னால் வந்த லாரி வீரப்பன் ஓட்டி சென்ற பைக்கின் பின்பக்கமாக லாரியின் இடது முன்பக்கம் மோதியதில் பைக்கை ஓட்டிச் சென்ற வீரப்பன் பைக்குடன் ரோட்டின் கிளப்புறமாக விழுந்து விட்டதாகவும், அவரது மனைவி சித்ரா மேற்கு பக்கமாக விழுந்த போது லாரியின் இடது முன் டையர் சித்ராவின் தலையில் ஏறியதாகவும், மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அதில் சித்ரா சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய்யாக சாட்சியம் அளிக்றேன் என்றால், சரியில்லை.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

சம்பவ சமயத்தில், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால், சரியல்ல, நான் இருந்தேன். வாகனங்கள் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தது என்பதை நான் நேரில் பார்க்கவில்லை, சத்தம் கேட்டு தான் சென்றேன் என்றால், சரிதான். விபத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

| |
|---|
| Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.<br><br>J.M. A.M.C. |

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.563/2024

Deposition of Witness for L.W.3 / P.W.7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சண்முகம் | | | |
| Father's Name | : | ஆறுமுகம் | Occupation | : | Hotel |
| Village | : | காவேரி RS | | | |
| District | : | ஈரோடு | Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**(எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)** Crl.M.P.No: எதிரி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு காவேரி R.S.–ல் குடியிருந்து கொண்டு, கருங்கல்பாளையம் ஆஸ்பத்திரி அருகில் உள்ள ஹோட்டல் கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 21.09.2021 ஆம் தேதி, மதியம் சுமார் 02.30 மணி அளவில், நான் வேலை செய்யும் ஹோட்டலுக்கு வந்து கொண்டிருந்த பொழுது, எங்கள் ஹோட்டலுக்கு அருகில் விபத்து நடந்திருந்தது. லாரி நின்று கொண்டிருந்தது. விபத்தில் அடிபட்டு ஒரு பெண் கீழே கிடந்தார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற பிறகு தான் பார்த்தேன். அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னுடைய முதலாளியை விசாரித்தார்கள். என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 22.09.2021 ஆம் தேதி அன்று, மதியம் சுமார் 2:30 மணியளவில், நான் கடையில் இருந்ததாகவும், அப்போது இரு சக்கர வாகனத்தில் விபத்தில் இறந்து போன

சித்ரா என்பவரை பின்னால் அமர வைத்துக்கொண்டு வீரப்பன் என்பவர் பைக்கை காவேரி ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையின் இடது புறமாக வீரப்பன் ஓட்டி வந்து கொண்டிருந்ததாகவும், எனது கடைக்கு அருகில் உள்ள அழகர் டாக்ஸி கடை முன்பாக வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது அவர்களுக்கு பின்னால் வந்த லாரி வீரப்பன் ஓட்டி சென்ற பைக்கின் பின்பக்கமாக லாரியின் இடது முன்பக்கம் மோதியதில் பைக்கை ஓட்டிச் சென்ற வீரப்பன் பைக்குடன் ரோட்டின் கிளப்புறமாக விழுந்து விட்டதாகவும், அவரது மனைவி சித்ரா மேற்கு பக்கமாக விழுந்த போது லாரியின் இடது முன் டையர் சித்ராவின் தலையில் ஏறியதாகவும், மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அதில் சித்ரா சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய்யாக சாட்சியம் அளிக்றேன் என்றால், சரியில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

சம்பவ சமயத்தில், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால், சரியல்ல, நான் இருந்தேன். வாகனங்கள் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தது என்பதை நான் நேரில் பார்க்கவில்லை, சத்தம் கேட்டு தான் சென்றேன் என்றால், சரிதான். விபத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால், சரியல்ல. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

J.M. A.M.C.